IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 653 /2009

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயா | Caste | : - |
| Husband's Name | : கிருஷ்ணன் | Calling | : - |
| Village | : காட்பாடி | Religion | : இந்து |
| Taluk | : காட்பாடி | Age | : 80 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 11 day of November, 2019.

Chief Examination

நான் இந்த வழக்கின் 1ம் வாதி. என்னை வாதிகள் தரப்பில் 1-வது சாட்சியாக முதல் விசாரணை செய்து கடந்த 15.7.2019 அன்று எனது தரப்பு முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். இன்று ஆவணங்களை குறியீடு செய்கிறேன். 27.08.1923ம் தேதியிட்ட அன்னப்பரெட்டி என்பவருக்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ1 ஆகும் (அசல் உயில் ஆவணத்தை தாக்கல் செய்யாததால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையோடு குறியீடு செய்யப்பட்டது). இதே நீதிமன்ற அசல் வழக்கு 113/2015 -ல் பிறப்பித்த, 3ம் வாதி விஜயலட்சுமி தாயார் தனலட்சுமி இறந்து போனதாக விளம்புகை செய்து பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ2 மற்றும் 3 ஆகும். 7.10.1941 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ4 ஆகும். வா.சா.ஆ4 ஆவணத்தில் ஒரு பகுதியை கிரையம் பெற்ற நாராயணசாமி அவரது மகன் சுப்பிரமணிரெட்டிக்கு 2.2.1968ம் தேதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ5 ஆகும். வெங்கட்ட ரெட்டி மனைவி சண்முகி அம்மாள் 17.8.2000ம் தேதிட்ட சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி கேசவரெட்டிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ6 ஆகும். தாவா சொத்தில் நான் குடியிருந்த வீட்டிற்கு செலுத்தப்பட்ட வீட்டுவரி ரசீதுகள் (எண்ணிக்கை-3) வா.சா.ஆ 7

ஆகும். 15.7.1977 தேதி 3ம் வாதியின் தந்தை கேசவரெட்டியின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ8 ஆகும். 3ம் வாதியின் தந்தை கேசவரெட்டி வீட்டுவரி வசூலிப்பதை நிறுத்தியதை ரத்து செய்து மீண்டும் வசூலிக்ககேட்டு அனுப்பிய கடிதத்தின் அசல் வா.சா.ஆ 9 ஆகும். 3ம் வாதியின் தந்தை கேசவரெட்டி கொடுத்த மனுவின்பேரில் கண்டிப்பேடு ஊராட்சி தாவா சொத்திற்கு வரிவிதிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அதற்கான ஆணை வா.சா.ஆ10 ஆகும். தாவா சொத்திற்கு 1997 முதல் 2000 வரைக்கான வீட்டுவரிரசீது வா.சா.ஆ11 ஆகும். 3ம் வாதியின் தாயார் தனலட்சுமியம்மாள் மற்றும் உமாபதிரெட்டி, வெங்கட்ரெட்டி ஆகியோரது பெயரில் தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட மனைவரிபட்டாவின் அசல் வா.சா.ஆ12 ஆகும். தாவாபடி தீர்ப்பு ஏற்படவேண்டும்.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.